**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 295/2017**

2025–ஆம் ஆண்டு ஜுன் மாதம் 12–ம் நாள் வியாழக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா.சந்திரமோகன்.,பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| தேதி: | 12.06.2025 | தகப்பனார் பெயர்: | சம்மந்தம் |
| பெயர்: | ராஜேநதிரன் (PW-1 Cross ) | தாலுக்கா: | சீர்காழி |
| கிராமம்: | வழுதலைக்குடி | சமயம்: | |
| தொழில்: | | வயது : | 64/2025 |

**3–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 12.06.2025**

1. என்ன பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தகப்பனார் எனக்கு உயில் எழுதி வைத்துளார் அதன் படி சொத்துக்கள் கிடைக்க வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளேன். மொத்தம் 6 அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்துக்கள் அனைததும் திருமுல்லைவாசல் வருவாய் கிராமத்திற்கு உட்பட்ட வழுதலைக்குடி கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான்.வழக்கு சொத்துக்கள் அனைத்தும் எனது தகப்பனாரும் 1–ம் பிரதிவாதியின் கணவரும் 2 முதல் 5 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். முதல் அயிட்ட சொத்தை 18.07.1972–ல் டி,.கே நாராயனன் என்பவரிடமிருந்து கிரயம் பெற்ற சொத்துக்கள் என்றால் சரிதான். அதன் மொத்த விஸ்தீரணம் 33 செண்டுக்கு சமமான 0.13.50 ஏர்ஸ் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்துள்ளது 0. 10.50 ஏர்ஸ் என்றால் சரிதான். 0.10.50 ஏர்ஸக்கு நான்கெல்லை எதுவும் கூறவில்லை என்றால் வழக்கறிஞரிடம் கூறியுள்ளேன். எனது தந்தை கிரயம் வாங்கிய 1–வது அயிட்ட சொத்தில் 0.03.0 ஏர்ஸ் பட்டா எனக்கு வழங்கப்பட்டது என்று பிராதில்

சொல்லியுள்ளது என்றால் சரிதான். மேற்படி பட்டா எந்த தேதியில் வழங்கப்பட்டது என்று நான் குறிப்பிட்டு எனது வழக்குரையில் கூறவில்லை என்றால் நான் எனது வழக்கறிடம் நான் சொல்லியுள்ளனே். எனக்கு வழப்பப்ட்டதாக சொல்லப்படும் பட்டாவையும் இந்த வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு அரசு பட்டா வழங்க வேண்டும் என்றால் எனது தந்தைக்கு சொந்தமான 1–வது அயிட்ட சொத்தை அரசு கையகப்படுத்தி இருக்க வேண்டும் அப்போதுதான் வழங்க முடியும் என்றால் அரசு பதிவேடுகலிலும் எனது பெயர்தான் உள்ளது. மேற்படி 1–வது அயிட்ட சொத்தில் எனக்கு வழங்கப்பட்ட பட்டாவானது எனது தந்தை இறந்த பிறகுதான் வழங்கப்பட்டது. எனது தந்தை இறந்த பிறகு அனைத்து வாரிசுகளுக்கும் 1–வது அயிட்ட சொத்தில் உரிமை உள்ளது அதனால் மற்ற வாரிசுகளின் சம்மதத்தை பெற்ற பிறகுதான் பட்டா வழங்க முடியும் என்றால் அரசாங்கம் எனக்கு பட்டா வழங்கியது. எனக்கு வழங்கிய பட்டா அரசு கையகப்படுத்தாதாலும் மற்ற வாரிசுகளின் சம்மதம் இல்லைாததாலும் பெறப்பட்டது என்பதால் அது செல்லதகதல்ல என்றால் சரியல்ல. அந்த சொத்தானது எனது தகப்பனரின் அனைத்து வாரிசுகளுக்கும் சொந்தமானது என்றால் சரியல்ல. 2 முதல் 6 அயிட்ட வழக்கு சொத்துக்களானது எனது தகப்பனாருக்கு நில உச்சவரம்பு சட்டதின் கீழ் ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான்.

பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக தொர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.